## யூலை - 17- திங்கள்

"என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர்" (மத்10:39)

### முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 1 : 8 – 14, 22

இவ்வாறிருக்க, யோசேப்பை முன்பின் அறிந்திராத புதிய மன்னன் ஒருவன் எகிப்தில் தோன்றினான். அவன் தன் குடிமக்களை நோக்கி, "இதோ, இஸ்ரயேல் மக்களினம் நம்மை விடப் பெருந்தொகையதாயும் ஆள்பலம் வாய்ந்ததாயும் உள்ளது. அவர்கள் எண்ணிக்கையில் பெருகிடாதவாறு தந்திரமாய்ச் செயல்படுவோம், வாருங்கள். ஏனெனில் போர் ஏற்படுமாயின், அவர்கள் நம் எதிரிகளுடன் சேர்ந்து கொள்வர் நம்மை எதிர்த்துப் போரிடுவர் இந்நாட்டிலிருந்தும் வெளியேறி விடுவர்" என்று கூறினான்.எனவே கடும் வேலையால் அவர்களை ஒடுக்குவதற்காக அடிமை வேலை வாங்கும் அதிகாரிகள் அவர்கள்மேல் நியமிக்கப்பட்டனர். பார்வோனுக்காக அவர்கள் பித்தோம், இராம்சேசு ஆகிய களஞ்சிய நகர்களைக் கட்டியெழுப்பினர். ஆயினும் எத்துணைக்கு எகிப்தியர் அவர்களை ஒடுக்கினார்களோ, அத்துணைக்கு அவர்கள் எண்ணிக்கையில் உயர்ந்தனர் பெருகிப் பரவினர். இதனால் எகிப்தியர் இஸ்ரயேல் மக்களைக் கண்டு அச்சமுற்றனர்.எகிப்தியர் இஸ்ரயேல் மக்களைக் கொடுமைப்படுத்தி வேலைவாங்கினர்கடினமான சாந்து செங்கல் வேலையாலும், அனைத்து வயல்வெளி வேலையாலும், மேலும் கொடுமைப்படுத்தி வாங்கிய ஒவ்வொரு வேலையாலும், அவர்கள் வாழ்க்கையே கசந்து போகும்படி செய்தனர். பின்னர், பார்வோன் தன் குடிமக்கள் அனைவருக்கும் ஆணைவிடுத்து,"பிறக்கும் எபிரேய ஆண்மகவு அனைத்தையும் நைல் நதியில் எறிந்து விடுங்கள். பெண்மகவையோ வாழவிடுங்கள்" என்று அறிவித்தான்.

**பதில்பாடல்:** ஆண்டவர் பெயரே நமக்குத் துணை

### நற்செய்தி : மத்தேயு 10 : 34 ---- 11 – 1

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது : "நான் உலகிற்கு அமைதி கொணர வந்தேன் என எண்ண வேண்டாம். அமைதியை அல்ல, வாளையே கொணர வந்தேன்.தந்தைக்கு எதிராக மகனையும்இ தாய்க்கு எதிராக மகளையும்இ மாமியாருக்கு எதிராக மருமகளையும் நான் பிரிக்க வந்தேன்.ஒருவருடைய பகைவர் அவரது வீட்டில் உள்ளவரே ஆவர்.என்னைவிடத் தம் தந்தையிடமோஇ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் என கருதப்படத் தகுதியற்றோர். என்னைவிடத் தம்மகனிடமோஇ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்.தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்.தம் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர்."உங்களை ஏற்றுக்கொள்பவர் என்னை ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவரோ என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறார்.இறைவாக்கினர் ஒருவரை அவர் இறைவாக்கினர் என்பதால் ஏற்றுக் கொள்பவர் இறைவாக்கினருக்குரிய கைம்மாறு பெறுவார். நேர்மையாளர் ஒருவரை அவர் நேர்மையாளர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் நேர்மையாளருக்குரிய கைம்மாறு பெறுவார்.இச்சிறியோருள் ஒருவருக்கு அவர் என் சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.இயேசு தம் பன்னிரு சீடருக்கும் அறிவுரை கொடுத்து முடித்ததும் பக்கத்து ஊர்களில் கற்பிக்கவும் நற்செய்தியை அறிவிக்கவும் அவ்விடம் விட்டு அகன்றார்.

**தியானம்:** கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தமக்கென்று வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரிமையாக்கிக் கொள்வர். (யோவா.12:24-25) விண்ணகத்தை நான் உரிமைப்பேறாக அடைய வேண்டும், நான் மோட்சத்திற்கு செல்ல வேண்டும் என்பதுதான் எல்லோருடைய விருப்பமாக இருக்கின்றது. ஆனால் அந்த விண்ணகத்தை அடைவது எளிதான காரியம் அல்ல. ஒரு விதை பலன் கொடுக்க வேண்டுமென்றால் குத்திக் கிழிக்கப்பட்ட, பண்படுத்தப்பட்ட நிலத்திற்குள் தன்னைப் புதைத்து, அந்த நிலத்தின் வெப்பத்திற்கு தன்னைக் கையளித்து, தன்னுடைய உருவை இழக்க வேண்டும். உடைக்கப்பட்ட உருக்குலைந்த விதையிலிருந்துதான் பசுமையான தளிர்கள் நிலத்திலிருந்து வெளியில் வந்து நூறு மடங்கான விளைச்சலைத் தரும். அதைப்போல இந்த மண்ணக வாழ்வில் நம்மை இந்த உலகத்தால் கறைபடாமல் பாதுகாக்க நம்மிலே இருக்கின்ற துர்க்குணங்களை இழக்க வேண்டும். "தான்" என்ற அகந்தைக்கும் ஆணவத்திற்கும் நாம் இறக்க வேண்டும். கடவுளைப் பற்றிய அறிவு மற்றும் அச்சத்தில் நாம் வளர வேண்டும். இன்றைய முதல் வாசகத்தில் நாம் வாசிப்பது போல நம்முடைய வாழ்க்கையே கசந்து போகும் அளவுக்கு சாத்தான் நம்மைச் சோதித்தாலும் எதிரிகள் நம்மை அழிக்க நினைத்தாலும் நம்முடைய விசுவாச வாழ்வில் தளர்ந்து போய்விடக்கூடாது. நம்மைச் சுற்றி நிகழுகின்ற நிகழ்வுகள் கடவுளோடு நாம் கொண்டுள்ள உறவை தீர்மானிக்கக் கூடாது மாறாக நம்முள் வல்லமையோடு செயல்படுகின்ற (எபே.3:20) இயேசுவின் உயிர்ப்பின் தூய ஆவியோடு இணைந்து இந்த உலகத்தின் சவால்களை சந்திக்க வேண்டும். சிலுவைகள் அழிந்து போகின்ற மனிதர்களுக்கு மடமை ஆனால் மீட்புபெறும் நமக்கோ கடவுளின் வல்லமை (1கொரி.1:18) என்று பவுலடியார் கூறுவது போல நாம் நம்முடைய வாழ்க்கையில் சந்திக்கும் துன்பங்கள் எல்லாம் நம்முடைய மனதை புடம்போட்டு பண்படுத்தவே என்பதை உணர வேண்டும். "அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகின்றது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கையும் மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள்" (1பேது.1:7). எனவே நம்முடைய துன்பங்கள் மத்தியிலும் இறைவனின் உடனிருப்பை உயிர்ப்பை நாம் அனுபவித்து மனமகிழ்வோடு இந்த சிலுவைகளை சுமந்தோமென்றால் நாம் நமக்குமட்டுமல்ல நம்மோடு உடன் வாழுகின்றவர்களுக்கும் அசீர்வாதமானவர்களாக வாழ்வோம். விதை மடிவது gyd கொடுக்கவே நாம் சிலுவைகளைச் சுமப்பது உயிர் பெற்று முடிவில்லாத வாழ்விற்குள் நுழைவதற்காகவே.